# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093860

1. District மாவட்டம்: VELLORE PS காவல்நிலையம்: VIGILANCE AND ANTI-CORRUPTION. Year ஆண்டு: FIR No. மு.த.அ. எண்: 7/2019 Date நாள்: 12.03.2019.

2. (i) Act சட்டம்: Crpc. Sections பிரிவுகள்: U/s 102 Crpc. r/w
(ii) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 of P.C (Amendment)
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: Act 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 11.3.19 Date to நாள் வரை: 11.3.19
Time Period : நேர அளவு Time from நேரம் முதல்: Prior to 17.15 hrs Time to நேரம் வரை: 18.17 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.03.2019 Time நேரம்: 17.15 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOLUME-I 2019 Time நேரம்: 17.15 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — [illegible]

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — Sub Registrar office pallikonda. 23 kms. West and Walaja Chennasamudaram Toll. 35 kms. East.
Beat Number : முறைக் காவல் எண் —
(b) Address : முகவரி Office of the Sub Registrar, Pallikonda. and Walaja. Chennasamudaram Toll - Lane 3 - towards chennai.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. [illegible] (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் [illegible]
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு: 1965 (d) Nationality நாட்டினம்: [illegible] (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில்: Dy. Inspection cell officer, District Inspection cell office, Vellore District. (g) Address முகவரி: District Inspection cell office, Tiruvannamalai and Vellore District Vellore - 9.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. Tr. S. Manigandan 44/19 s/o Seetharaman, Sub-Registrar Pallikonda Sub Registrar office, Vellore District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் — No Delay —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed Herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station 12/3/19
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 12.03.2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 09.00 hrs.

Name: பெயர் S. VIJAY
Rank: நிலை ..................No. எண் .........
INSPECTOR OF POLICE, VIGILANCE & ANTI-CORRUPTION, VELLORE.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 '1 -HCL-12)p 2

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u> வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் S.விஜய் ஆகிய நான் 12.03.2019-ம் தேதி காலை 09.00 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, வேலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலக துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.S.ஜோதி, த/பெ. சம்பத், என்பவர் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரை உத்தரவுபடி பெற்று பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர் S.ஜோதி, த/பெ.சம்பத், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், வேலூர்-632009. பெறுநர்: துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை, கூடுதல் பொறுப்பு வேலூர். அய்யா, நேற்று 11.03.2019-ந் தேதி மாலை சுமார் 1645 மணிக்கு என்னுடைய அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது பள்ளிகொண்டா சார் பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளர் திரு.மணிகன்டன், அவர் செய்ய வேண்டிய பணிகளுக்கு பொதுமக்களிடம் இருந்து நேரடியாகவும், இடை தரகர்மூலமாகவும், ஆவண எழுத்தர்கள் மூலமாகவும் லஞ்சமாக லட்சக்கணக்கில் வசூல் செய்து வைத்துள்ளதாகவும் அன்றைய தினம் சுமார் 30 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும் இரகசிய தகவல் கிடைத்தது நான் மேற்படி தகவலை என்னுடைய தகவலர்களை தொடர்பு கொண்டு ஊர்ஜிதம் செய்து கொண்டு மாலை சுமார் 17.15 மணிக்கு வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நேரில் ஆஜராகி, வேலூர் மாவட்டத்தில் பள்ளிகொண்டா சார் பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளராக பணியாற்றி வரும் திரு.மணிகண்டன் அவர்கள் சார் பதிவாளர் அலுவலகத்தில் 11.03.2019 பணியில் இருந்தபோது சுமார் 30 ஆவணங்கள் பதிவானதாகவும், அவ்வாறு பதிவான ஆவணங்களுக்குரிய நபர்களிடமிருந்து நேரடியாகவும், இடைத்தரகர்கள் மூலமாகவும், சம்மந்தப்பட்ட ஆவண எழுத்தர்கள் மூலமாகவும், லஞ்சமாக இலட்சக்கணக்கில் பணத்தை வசூல் செய்து கொண்டு, சார் பதிவாளர் வேலூர் நோக்கி TN 06 D 4775 என்ற பதிவு எண் கொண்ட வெள்ளை நிற மாருதி ஸ்விப்ட் டிசையர் காரில் புறப்பட தயாராக உள்ளதாக இரகசிய தகவல் கிடைத்தது, மேற்சொன்ன தகவலை தகவலர்கள் மூலம் உறுதி செய்து கொண்டு அதனை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு வேலூர் அலுவலகத்தில் தெரிவித்து, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அரசு வாகனத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு வேலூர் அலுவலக குழுவினர் மற்றும் நான் மாலை சுமார் 1725 மணிக்கு புறப்பட்டு, பள்ளிகொண்டா நோக்கி தகவலர் சொன்ன TN 06 D 4775 என்ற பதிவு எண் கொண்ட வெள்ளை நிற மாருதி ஸ்விப்ட் டிசையர் காரினை பார்த்துக்கொண்டு செல்ல, அந்த காரானது கந்தனேரி என்ற இடத்தில் வேலூர் நோக்கி, எதிர் திசையில் கடந்து சென்றது. உடனே, அவ்விடத்திலிருந்து நாங்கள் சென்ற அரசு வாகனத்தை "U" Turn செய்து, மேற்சொன்ன வாகனத்தை பின்தொடர்ந்து சென்றபோது, அந்த வாகனத்தில் முன்னிருக்கையில் சிகப்புநிற தொப்பி அணிந்திருந்த சுமார் 45 வயது மதிக்கத்தக்க ஆண் நபர் இருந்தார். மேற்படி வாகனத்தை சுமார் 25 வயது மதிக்கத்தக்க மற்றொரு ஆண் நபர் ஓட்டிச் சென்றது தெரிந்தது. அந்த வாகனத்தை சென்னை நோக்கி செல்லும் நெடுஞ்சாலையில் பின் தொடர்ந்து சென்று, வாலாஜா சென்னசமுத்திரம் சுங்கச்சாவடியில் பூத் எண்.3-ல் சுங்கக்கட்டணம் செலுத்துவதற்காக நிறுத்தி மேற்படி காரின் முன் இருக்கையில் அமர்ந்திருந்த நபர் ஏதோ ஒரு அட்டையை பூத்தில் இருந்தவரிடம் கொடுத்து கொண்டிருந்தபோது, மாலை சுமார் 1817 மணியளவில் மேற்படி வாகனத்தை இடைமறித்து, சுங்கச்சாவடியின் பூத் எண்.3-ல் இருந்து சாலையின் ஓரத்திற்கு மேற்படி காரினை நிறுத்தி அந்த காரில் இருந்தவர்களுக்கு எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு முன் இருக்கையில் உட்கார்ந்திருந்தவரின் பெயர், விலாசம் கேட்க, அவர் தன்னுடைய பெயர் மணிகண்டன் என்றும், பள்ளிகொண்டா சார் பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளராக கடந்த செப்டம்பர்-2017 முதல் பணிபுரிந்து

வருவதாகவும், தற்சமயம் தன்னுடைய சொந்த வேலையாக தன்னுடைய ஊரான காஞ்சிபுரத்திற்கு சென்று கொண்டிருப்பதாக சொன்னார், மேலும் ஓட்டுனர் பெயர் தனக்கு தெரியாது என்றும் சொன்னார். பின்னர் காரின் ஓட்டுனரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் பாலாஜி, த/பெ.பாபு, நெல்லூர்பேட்டை, குடியாத்தம் என்றும் தான் தற்காலிக ஓட்டுனராக பணி செய்வதாகவும் கூறினார். மேலும் காரின் உரிமையாளர் திரு.கோபி என்பவர் காரை தன்னிடம் கொடுத்து, பள்ளிகொண்டா சார் பதிவாளரை காஞ்சிபுரத்திற்கு அழைத்து சென்று விட்டுவிட்டு வரும்படி சொன்னதால் 11.03.2019-ஆம் தேதி மாலை சுமார் 1645 மணிக்கு பள்ளிகொண்டா சார் பதிவாளர் அலுவலகம் சென்று, சார் பதிவாளர் திரு.மணிகண்டன் அவர்களை சந்தித்து, சார் பதிவாளர் தன்னை அலுவலகத்திற்கு வெளியில் காத்திருக்கும்படி சொன்னதாகவும், சுமார் 30 நிமிடங்கள் கழித்து, சார் பதிவாளர் திரு.மணிகண்டன் அவர்கள் ஒரு கருப்பு நிற லெதர் பேக்குடன் காரில் வந்து ஏறிக்கொண்டு காஞ்சிபுரம் நோக்கி செல்லுமாறு சொன்னதாகவும் கூறினார். மேலும் வாலாஜா சென்னசமுத்திரம் சுங்கச்சாவடி வந்தபோது, சுங்கச்சாவடியில் டோல் செலுத்துவதற்காக சார் பதிவாளரிடம் சொன்னபோது, அவர் அவருடைய அடையாள அட்டையை தன்னிடம் கொடுத்து பூத்தில் உள்ளவரிடம் காண்பித்தபோது குழுவினர் வந்து காரை இடைமறித்து சாலையின் ஓரமாக நிறுத்தியதாக சொன்னார். அதன் பின் எங்களை சுயபரிசோதனை செய்து காண்பித்து, சார்பதிவாளர் திரு.மணிகண்டன் வந்த காரில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. காரின் முன்னிருக்கையில் சோதனை செய்ய, அதில் எவ்வித பொருளோ, பணமோ இல்லை. பின் இருக்கையை சோதனை செய்ய, கருப்பு நிற லெதர் பேக் ஒன்று இருந்தது. அதனை சோதனை செய்ய, அதில் PSR SILK SAREES என்று அச்சிடப்பட்டிருந்த மஞ்சள் நிற துணிப்பை ஒன்று இருந்தது. அந்த பையை பார்க்க, அதில் 500 ரூபாய் நோட்டு கட்டுகள் நான்கு இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, ஒவ்வொரு கட்டிலும் 100 இநூறு ரூபாய் நோட்டுகளாக ஆக மொத்தம் ரூ.2,00,000/- இருந்தது. அப்பணம் குறித்து சார் பதிவாளர் திரு.மணிகன்டன் அவர்களிடம் கேட்க, அவர் பதில் ஏதும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேலும், அந்த பணத்திற்கு உரிமை ஏதும் கோரவில்லை. தக்க முகாந்திரம் கூற இயலாத மற்றும் உரிமை கோராத அந்த பணம் ரூ.2,00,000/- மற்றும் அந்த பணம் இருந்த மஞ்சள் நிற துணிப்பை வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்படி கருப்புநிற லெதர் பேக்கின் மற்றொரு ஜிப்பை திறந்து பார்க்க, அதில் செய்தித்தாள் ஒன்று சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. அதை வெளியே எடுத்து பார்க்க, அதில் கத்தையாக பணம் இருந்தது. மேற்படி செய்தித்தாளை பார்க்க, இந்து தமிழ் திசை, காஞ்சிபுரம் பதிப்பு, திங்கள் மார்ச் 11 2019 என்றிருந்தது. அந்த பணம் சம்மந்தமாக, சார்பதிவாளர் திரு.மணிகண்டன் அவர்களிடம் விசாரிக்க, அவரால் அதில் எவ்வளவு தொகை இருந்தது என்று கூற இயலவில்லை. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, ஆக மொத்தம் ரூ.26,800/- இருந்தது. அந்த தொகை குறித்து, சார் பதிவாளர் திரு.மணிகண்டன் அவர்களிடம் கேட்க, அவர் பதில் ஏதும் கூறாமல் மௌனமாக இருந்தார். ஆகையால், தக்க முகாந்திரம் கூற இயலாத, உரிமை கோராத அப்பணம் மற்றும் பணம் இருந்த இந்து தமிழ் திசை, காஞ்சிபுரம் பதிப்பு, திங்கள் மார்ச் 11 2019 என்ற 18 பக்கங்கள் கொண்ட செய்தி தாள் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. ஆக மொத்தம் ரூ.2,26,800/- மற்றும் அப்பணம் இருந்த கருப்பு நிற லெதர் பேக் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. வழக்கின் நிமித்தம் கருப்பு நிற லெதர் பேக்கில் இருந்து கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.2,26,800/- சம்மந்தமாக, சார் பதிவாளர் திரு.மணிகண்டன் அவர்களிடம் மீண்டும் விளக்கம் கேட்க, அவர் அந்த கருப்பு நிற லெதர் பேக் தன்னுடையதுதான் என்றும், ஆனால், அந்த பணத்தை தான் கடனாக வாங்கி வந்ததாக கூறினார். அவரிடம் கடனாக யாரிடம் பெற்றீர்கள் என்று கேட்க, பதில் ஏதும் கூறாமல் மௌமாக இருந்தவர், சிறிது நேரம் கழித்து இன்றைய தினம் பள்ளிகொண்டா

சார் பதிவாளர் அலுவலகத்தில் 30 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும், அவ்வாறு பதிவு செய்யப்பட்ட ஆவணங்களுக்கு சம்மந்தப்பட்ட நபர்களிடமிருந்தும், சம்மந்தப்பட்ட ஆவண எழுத்தர்கள் மூலமாகவும் தனக்கு வசூல் மூலம் கிடைக்கப்பெற்ற தொகைதான் என்று கூறினார். தொடர்ந்து அவ்விடத்தில் வைத்து சோதனை செய்ய ஏதுவானதாக இல்லாத காரணத்தினால், சுமார் 50 அடி தொலைவில் இருந்த சென்னசமுத்திரம் சுங்கச்சாவடி அலுவலக வளாகத்திற்கு சென்று, அங்கு பொறுப்பில் இருந்த திரு.N.அண்ணாமலை த/பெ நடேசன், சுழற்சி முறை பொறுப்பு அதிகாரி, சென்னசமுத்திரம் சுங்கச்சாவடி, வேலூர் மாவட்டம் என்பவரிடம் எங்களை அறிமுகம் செய்து கொண்டு வழக்கின் சங்கதிகளை குறித்து விளக்கி கூறியும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், நடவடிக்கைகள் குறித்த செயல்முறைகள் தயார் செய்ய அவர் பொறுப்பில் இருந்த அலுவலகத்தில் உள்ள ஏதேனும் ஒரு அறையை ஒதுக்கித்தருமாறு கேட்டு அனுமதியின்பேரில் அங்கிருந்த எலக்ட்ரிஷியன் அறைக்கு சென்று, சார் பதிவாளர் திரு.மணிகண்டன் அவர்களை அழைத்து சென்று, அவரை திரேக சோதனை செய்ய, அவருடைய வலது பேண்ட் பாக்கெட்டில் ரூபாய் 530/- மட்டும் இருந்தது. அவரிடம் அது குறித்து கேட்க, அவர் அந்த பணம் தன்னுடைய சொந்த பணம் என்று சொன்னதால், அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அவர் வசம் இருந்த சார்பதிவாளர் திரு.மணிகண்டன் அவர்கள் பணி செய்யும் பத்திரப்பதிவு துறையில் இருந்து வழங்கப்பட்ட அசல் அடையாள அட்டையை பார்வை செய்து மீண்டும் அதனை அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. பின்னர், மேற்படி காரின் ஓட்டுனர் திரு.பாலாஜியை அழைத்து, அவரை திரேக சோதனை செய்ய, அவரிடம் பொருளோ, பணமோ எதுவும் இல்லை. பின்னர், சார் பதிவாளர் திரு.மணிகண்டன் அவர்களிடம் மேற்படி காரின் உரிமையாளர் பற்றி கேட்க, தனக்கு ஒரு காரினை ஏற்பாடு செய்து கொடுக்கும்படி மாதனூர் ஆவண எழுத்தர் திரு.மோகன் என்பவரிடம் தெரிவித்ததாகவும் அதன் பேரில், TN 06 D 4775 என்ற பதிவு எண் கொண்ட வெள்ளை நிற மாருதி ஸ்விப்ட் டிசையர் கார் தனக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், அதன் உரிமயாளர் குறித்த விபரம் தனக்கு நேரடியாக தெரியாது என்றும் தான் சொந்த வேலையாக தன் வீடு உள்ள காஞ்சிபுரம் செல்வதாக கூறினார். மேற்படி கார் குறித்து, அதன் ஓட்டுனர் திரு.பாலாஜி என்பவரிடம் கேட்க, தான் அந்த காருக்கு தற்காலிக ஓட்டுனர்தான் என்றும், காரின் உரிமையாளர் குடியாத்தம் நெல்லூர்பேட்டையை சேர்ந்த திரு.கோபி என்பவர் சொன்னதின் பேரில், தான் சார் பதிவாளர் அவர்களுக்காக காஞ்சிபுரம் நோக்கி காரை ஓட்டியதாக கூறினார். மேற்படி TN 06 D 4775 என்ற பதிவு எண் கொண்ட வெள்ளை நிற மாருதி ஸ்விப்ட் டிசையர் காரின் வாகனப்பதிவு சான்று நகல் மற்றும் ஓட்டுனர் திரு.பாலாஜி த/பெ பாபு என்பவரின் ஓட்டுனர் உரிமச்சான்று (TN23T 2011 0002060, Date of Issue:29.07.2011, validity:28.07.2031) நகல் ஆகியவற்றை வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. சென்னசமுத்திரம் சுங்கச்சாவடியில் TN 06 D 4775 என்ற பதிவு எண் கொண்ட வெள்ளை நிற மாருதி ஸ்விப்ட் டிசையர் காரில் மேற்கொள்ளப்பட்ட இந்த இருதுறை திடீர் சோதனையில் மொத்தம் பணம் ரூ.2,26,800/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அதில் 6 இரண்டாயிரம் நோட்டுகளும், 428 இநூறு ரூபாய் நோட்டுகளும் மற்றும் 8 நூறு ரூபாய் நோட்டுகளும் இருந்தன. இந்த இருதுறை திடீர் சோதனை மேற்கொண்டபோது உடலாலோ உள்ளத்தாலோ யாருக்கும் துன்புறுத்தல் ஏற்படுத்தவில்லை. மேற்படி வாகனத்திற்கு எவ்வகையிலும் சேதம் ஏற்படுத்தவில்லை. இந்த திடீர் சோதனை குறித்த செயல் முறை இரவு 2230 மணிக்கு முடிக்கப்பட்டது. தக்க முகாந்திரம் கூற இயலாத மற்றும் உரிமை கோராத வகையில் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,26,800/-, கருப்புநிற Leather Bag, PSR SILK SAREES என்று அச்சிடப்பட்டிருந்த மஞ்சள் நிற துணிப்பை, இந்து தமிழ் திசை, காஞ்சிபுரம் பதிப்பு, திங்கள் மார்ச் 11 2019 என்ற 18 பக்கங்கள் கொண்ட செய்திதாள், மற்றும் வாகனம் TN 06 D 4775 என்ற பதிவு எண் கொண்ட காரின் பதிவு சான்றின் நகல்,

காரின் ஓட்டுனர் பாலாஜி என்பவரின் ஓட்டுனர் உரிமம் நகல் மற்றும் 11.03.2019-ஆம் தேதியன்று தயார் செய்யப்பட்ட இருதுறை திடீர் சோதனை குறித்த அசல் செயல்முறை ஆகியவற்றை தங்களிடம் ஒப்புவிக்கிறேன். மேலும் தன்னுடைய பதவியை துஷ்பிரயோகம் செய்து லஞ்சமாக பணம் வசூல் செய்த திரு.S.மணிகன்டன், சார் பதிவாளர், பள்ளிகொண்டா சார் பதிவாளர் அலுவலகம் அவர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சட்டபடியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxxxx துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், வேலூர்.

Sir, Received the complaint on 12/03/2019 at 09.00 hrs. with the instructions of superior officers, registered a case in V&AC, Vellore Detachment Cr.No.07/2019, U/s 102 CrPC r/w 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018. Sd(xxxx) 12/03/2019 (S.Vijay). The original FIR, Complaint and original Joint Surprise check proceedings, dt:11.03.2019 submitted to the Chief Judicial Magistrate and Special Judge, Vellore and other copies of FIR and other documents submitted to the officers concerned.

13. Action Taken : A case in Vigilance and Anti-Corruption, Vellore Cr.No.07/2019, U/s 102 CrPC r/w 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018.

The original FIR submitted to the Chief Judicial Magistrate and Special Judge, Vellore and other copies of FIR, submitted to the officers concerned.

12/3/19
(S.VIJAY)

Inspector of Police,
Vigilance and Anti-Corrpution,
Vellore.

14. Signature thumb impression of the complainant/informant: Obtained in first sheet.

15. Date and Time of Despatch to the Court: 12.03.2019 at 09.30 hrs.